தாலாட்டி விடுகின்ற முயற்சியில் நம்முடைய முதலமைச்சர் ஈடுபட்டு இருக்கின்றார். ஆகவே உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து, இந்த ஆட்சி கூர்ந்து கவனிக்கும் என்பதை எடுத்துக் கூறி , என்னுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை; நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளின் படங்களை வெளியிடுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாகவே, வரவு-செலவுத் திட்ட அறிக்கை அவையில் படைக்கப்படுகிற போதும், ஆளுநர் உரையின் போதும் தமிழக அரசு செய்தித் துறை யினரையும் தொலைக்காட்சி நிலையத்தினரையும் இந்த

நிகழ்ச்சிகளைப் படம் எடுக்க அனுமதிப்பது உண்டு. அவர்களும் ஆளுநர் வருகை, உரையாற்றுதல், முதல்வர் வருகை, வரவு—செலவுத் திட்ட அறிக்கையைப் படித்தல் ஆகியவற்றை மட்டும் படமாக எடுத்து வெளியிடுவது மரபாக இருந்து வருகிறது. இவற்றைத் தவிர அவையில் நடக்கும் பிற நிகழ்ச்சிகளின் படங்கள் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. 1988, சனவரி 28 அன்று சட்டப் பேரவையின் நிகழ்ச்சிகள் தொடர்பாக வெளியில் எடுக்கப்பட்ட படங்கள்தான் காண்பிக்கப்பட்டனவே தவிர அவைக்குள் நடைபெற்ற எந்த நிகழ்ச்சியும் படங்களாக வெளியிடப்படவில்லை.

இந்த மரபை ஒட்டியும், முன் உதாரணங்களை மனதிற் கொண்டும்தான் 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒட்டிய காட்சிகளையும், படங்களையும் வெளியிடக் கூடாதெனத் தடை விதித்திருந்தேன்.

எனினும் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் இதனை வலியுறுத்தி வருவதை மனத்திற் கொண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்த நிகழ்ச்சி தொடர்பான படங்களை வெளியிட அனுமதி தந்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டதை ஏற்றும் சென்னைத் தொலைக்காட்சி நிறுவனத்தாரும் தமிழக அரசு செய்தித் துறையினரும் 25—3—1989-ஆம் நாளன்று சட்டமன்றத்துக்குள் எடுத்த படங்களை வெளியிட்டுக்கொள்ள அனுமதி வழங்குகிறேன். அவற்றை வெளியிடுவதும், வெளியிடாதிருப்பதும் அவர்களது பொறுப்பும் விருப்பும் ஆகும்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 17/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

---

* 2—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(பிற்பகல் 12-50)

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஏற்கனவே, கடந்த காலத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படவில்லையென்று பல்வேறு கிளர்ச்சிகள் நடத்தப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் பெருவாரியாக உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னாலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தல் வெற்றியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றங்களை, அவற்றினுடைய ஜனநாயக உரிமைகளை கேலிக் கூத்தாக்குகிற முறையில், கொண்டு வந்த சட்டம் இப்பொழுது திருத்தப்படுகிறது. உதாரணத்திற்கு என்னுடைய காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் 14 பேர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆக மொத்தம் 15; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 12 பேர்கள். ஆகவே, 15 பேர்களாக உள்ள அந்த ஊராட்சி ஒன்றியத்தில் 12 பேர்களாக இருக்கக்கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, 4 பேர்களை நியமனம் செய்து, 12, 16 ஆக்கப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 பேர்கள் சிறுபான்மையாக்கப்பட்டு, ஒன்றிய உப தலைவர் கோ ஆப்ட் செய்யப்பட்ட 10 பேர்களும் ஆக மொத்தம் 12 பேர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இது என்ன ஜனநாயக முறை; ஜனநாயகத்தைப் பற்றி பேசுகிறவர்களே, ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கினார்கள், அது இன்றைக்குத் திருத்தப்படுகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். நான் பணிவாகக் கேட்டுக்கொள்வது, பஞ்சாயத்து இல்லாத நேரத்திலே, கணக்குகளை எல்லாம் அதிகாரிகள் நிர்வகித்தார்கள். அந்தக் கணக்குகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இன்று வரையிலும் ஒப்படைக்கவில்லை. அக்கணக்குகள் ஊராட்சி மன்றத் தலைவர்களிடத்திலோ, ஊராட்சி ஒன்றியத்திடமோ ஒப்படைக்கப்படவில்லை. அவை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். குடிநீர், மின்சார விளக்கு ஆகியவற்றை அரசே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராம ஊராட்சிகளிடம் அதை நிர்வகிக்க நிதி வசதி யில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியாகிய குடியாத்தம் பேரூராட்சியிலே 44 ஊராட்சிகள்

இருக்கின்றன. அதிலே 35 ஊராட்சிகளிலே நிதிநிலை சரியாக இல்லை. மின்சார பல்புகள் வாங்கப்படுவதில்லை. அங்கே மோட்டார் பம்புகள் பழுதடைந்தால் ரிப்பேர் செய்ய முடிய வில்லை. ஆகவே, நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். கிராமப் புறங்களிலே, குடிநீர் வசதியும், விளக்கு வசதியும் செய்யும் பொறுப்பை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைக்குக் கிராமப்புற பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப் படுகிற மானியத் தொகையை அதிகரிக்க வேண்டும். ஏற்கெனவே 40 பைசா, 42 பைசா என்றிருப்பதை, இன்றைக்குள்ள விலை வாசியைக் கருத்தில் எடுத்துக் கொண்டு அதை உயர்த்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல், கேளிக்கை வரி, வாகன வரி போன்று பல்வேறு வகையான வரிகளையும், மானியங் களையும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், கனிம வள உரிமங்களையும் நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இத்தகைய உரிமங்களைப் பெறுகிறவர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேகூட நான் ஏற்கனவே கேட்டுக் கொண்டேன். இந்த அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னாலே, ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள், நகராட்சித் தலைவர் களை அழைத்துப் பேசி, அங்குள்ள பிரச்சினைகளைப்பற்றி தெரிந்து, நிவர்த்திக்க அக்கறை எடுத்துக்கொண்டது. அது போல, பேரூராட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேச வேண்டும். பேரூராட்சி மன்றங்களுக்கு, ஒன்றியங்களிலே எந்த விதமான திட்டத்தின் மூலமும் நிதி உதவிகள் செய்யப்படுவ தில்லை. நான் 1958 ஆம் ஆண்டு முதல், தாராபுரம் என்று அழைக்கப்படுகிற காட்பாடி பேரூராட்சியில் இன்றைய வரையில் தலைவராக இருக்கிறேன்.—மத்தியிலே கலைக்கப்பட்ட நாட்கள் தவிர. கடந்த 25, 30 ஆண்டுகாலமாக, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக, எங்களுக்கு எந்தவிதமான உதவியும் இல்லை. என். ஆர். இ. பி., ஐ. ஆர். டி. பி. போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம், எந்த உதவியும் கிடைக்கவில்லை. அதே போல் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே கலந்து கொண்டு எங்கள் குறைகளைச் சொல்ல வாய்ப்பில்லை. நாங்கள் அநாதையாக இருக்கிறோம். ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவர்களையும் அழைத்துப்பேசி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அரசு அவ்வப்போது தனது ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதால், அந்த உயர்வை, பேரூராட்சி மன்றங்கள் தன்கீழ் உள்ள ஊழியர்களுக்கு வழங்க இயலவில்லை. இதனால் பேரூராட்சி மன்றங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அவற்றிற்கு மானியங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளிலே ஏதாவது, பொது இடங்களிலே ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டால் அதை அகற்றுவதற்கு நகராட்சிகளுக்கு உரிமையிருக்கிறது. பேரூராட்சிகளுக்கு அப்படிப்பட்ட உரிமை இல்லை. ஆகவே பேரூராட்சிகளுக்கும் அத்தகைய வாய்ப்புக்களை, உரிமைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட உரிமைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிற நேரத்திலே எனக்கு முன்னாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நம்முடைய மாநில அரசு உரிமைகளைப் பாதுகாக்க, மேன்மேலும் சலுகைகளைக் கொடுக்கின்ற நேரத்தில், மத்திய அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருக்கிற அடிப்படை உரிமைகளைக்கூட பறிப்பதற்கான சட்டங்களை முன்மொழிந்து இருக்கிறது என்று. உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பறிக்கின்ற முறையிலே மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டங்களை எதிர்த்து, நாடு முழுவதிலும் இருக்கின்ற காங்கிரஸ் சர்க்கார்களும், காங்கிரசல்லாத சர்க்கார்களும் சேர்ந்து பொதுவான எதிர்ப்பைக் காட்டுவதற்கு முன் வந்திருக்கிறார்கள். அத்தகைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு நமது தமிழக அரசும் முன்வர வேண்டும். எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் உள்ளாட்சி அமைப்புகளிலே ஏற்பட்டிருக்கிற குறைபாடுகளை நிவர்த்தி செய்கின்ற வகையில் திருத்தங்கள் கொண்டுவருவதை வரவேற்று, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல்—அந்த அதிகாரங்களை இழந்துவிட்டு பணிகளை செய்ய முடியாத நிலையிலிருந்து—அவர்கள் பணிகளைச் செய்வதற்கு வழிவகைகளைச் செய்கின்ற ஒரு அரசாங்கமாக இன்றைய தினம் நம்முடைய அரசாங்கம் செய்திருப்பதை உண்மையிலேயே வரவேற்கிறோம். இதற்கு முந்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசியது போல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவையிலே, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கக்கூட அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவிகள் எல்லாம் எப்படியெல்லாம் மாற்றப்பட்டன என்பதை நாடு அறியும்.

இதற்கு முன்னாலே ஜனநாயகத்தைப் பற்றி பேசியவர்கள் எல்லாம் எப்படி ஜனநாயகம் பறிக்கப்பட்டிருந்தது என்பதை மக்கள் அறிவார்கள். அதே போல இப்போது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்குத் தம்முடைய அவையைக்

கூட்டுவதற்கு, அதற்குத் தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடிய தகுதியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவருக்கு வழங்கியிருக்கிறது என்பதை—இந்தச் சட்ட திருத்தத்தின் மூலம்—நான் அதை வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்கள் பகுதியில்கூட இந்த மாதிரி ஒரு நிகழ்வு நிகழ்ந்தபோது, முன்னாலே இருந்த அமைச்சர் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்ற ஒரு ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவரைத் தரக்குறைவாகப் பேசி, வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டதை நாங்கள் எல்லாம் அறிவோம். அந்த வழக்கு கூட நீதிமன்றத்திலே நடந்து அதிலே விடுதலையாகியிருக்கிறார்கள். இந்த மாதிரி சூழ் நிலைகள் எல்லாம் இல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகிற ஒரு பொறுப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், உறுப்பினர் களையும் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு அமைப்பையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு தலைவருக்கு—ஒரு குழுவுக்கு—வழங்கியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அது மட்டுமல்ல ஊராட்சி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், கோட்டாட்சியர் அவர்களுக்கும் துணைத் தலைவர் தேர்தலை நடத்தும் உரிமையும் வழங்கப்பட்டிருந்தது. அந்த மாதிரியான ஒரு முறை இப்போது மாற்றியமைக்கப்பட்டிருப்பது வரவேற்கப் படுகிறது. ஒரு நிகழ்ச்சியாகச் சொன்னால் இந்த சட்ட திருத்தத்தைப் பொதுவாக நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம் அதுமட்டுமல்ல, பொதுவாக ஊராட்சி ஒன்றியத்திலே சில சிரமங்கள் இருக்கலாம். இப்போதுகூட அந்தத் திருத்தங் களையெல்லாம் மாற்றி—கவர்னர் அவர்களுக்கு ஒரு அதி காரத்தை வழங்குவது போல—ஒரு மாநிலத்திலே இன்னொரு அரசாங்கம் நடைபெறுவதுபோல ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதாக இருக்கிறார்கள் என நினைக்கிறபோதுதான் உண்மையிலேயே எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. ஒரு சட்ட சபை நிகழ்கிறபோது—தமிழகத்திலே ஒரு மாநில அரசு நடைபெறுகிறபோது—உள்ளாட்சி அதிகாரம் என்று சொல்லி, தனி ஒரு அதிகாரத்தை ஏற்படுத்தி, அந்த அதிகாரத்தைக் கலைப்பதற்கோ அல்லது அந்த அதிகாரத்தைக் பிரயோகிப் பதற்கோ ஒரு கவர்னருக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால் அதிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அந்த அதிகாரம் இல்லையென்று சொன்னால், அப்படிப்பட்ட ஒரு நிலை பின்னால் வர இருக்கிறது என்று நினைக்கிறபோது, உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் தலைவர்களுக்கு எல்லாம் இருந்த தகுதி யையும் பதவியையும் குறைத்து வைத்திருந்தார்கள். இப் போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த

பின்னால் அவர்களுக்கு எல்லாம் தகுதியையும், திறமையையும், அதிகாரத்தையும் வழங்கியிருக்கிறோம் என்று சொன்னால், அது வரவேற்கக்கூடிய ஒன்றுதான்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் இரண்டு மணித் துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதற்குப் பின்னாலே இப்பொழுது சில குறைகள் இருப்பதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக நமது அமைச்சரவர்களுக்குச் சொல்லக் காத்திருக்கிறேன். இப்பொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலேயும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை நாம் நிர்வகித்து வருகிறோம். நான்கூட சில ஊராட்சி ஒன்றிய கூட்டங்கள் நடைபெறுகிறபொழுது அஜெண்டாக்கள் அனுப்புவதைப் பார்க்கிறேன். அவைகளிலே, ஒன்றன்பின் ஒன்றாக வருகின்ற அஜெண்டாக்களிலே பார்க்கிறேன். சம்பளம் கொடுப்பதையும், டெலிபோன் பில் கொடுப்பதையும், மற்றவைகளையும் பற்றித்தான் வந்திருக்கிறதே தவிர, ஏதாவது சரியான திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. அவர்களிடம் போய் இன்னின்னது செய்யவேண்டும். ஊரிலுள்ள சாலைகளைப் பராமரிக்க வேண்டும். பள்ளிக்கூடக் கட்டிடங்கள் இடிந்து விழப் போகின்றன. அவைகளைக் கண்காணிக்க வேண்டும். அவைகளைச் சீர்படுத்த வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது எங்களிடம் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூல்நிலைகளிலே, பணம் இல்லாத ஒன்றியங்கள்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையிலேதான் இந்த மருந்தகங்களெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த மருந்தகங்களிலே வேலை செய்கின்ற டாக்டர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளத்தைத் தவிர, அந்த மருந்துகளை வாங்கி வைக்கின்ற அளவிற்கு அந்த மருந்தகங்களில் முடியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட மருந்தகங்களை நாம் நடத்துவதைவிட, அதை அரசுக்குக் கொடுத்து, நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் அமைச்சகத்திற்கே கொடுத்து, அவர்கள் நடத்துவதற்கு வழிமுறைகளைச் செய்தால், அந்த அமைச்சகத்திலே கொடுத்து விட்டால், அந்த மருந்தகங்களிலே அந்த மருந்துகள் இருந்தாவது மக்களுக்குப் பயன்படுகின்ற ஒரு முறையாவது இருக்கும். மருந்தகங்களிலே மருந்துகள் இல்லை. டாக்டர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் இரண்டாயிரம் ரூபாயாக இருந்தாலும் மற்ற ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளங்கள் எல்லாம் 4,000 ஆக இருக்கின்றபொழுது, சம்பளத்தைத்தான் மாதா மாதம் கொடுக்க முடியுமே தவிர மருந்துகளை வாங்கி

வைக்கமுடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றி மருந்துகள் எல்லாவற்றையுமே அந்த நல்வாழ்வுத் துறை அமைச்சகத்திற்கே, அந்த இலாகாவிற்கே கொடுத்துவிட்டால், நம்முடைய நிலைமை, அதற்குச் செலவிடுகின்ற பணத்தைக்கொண்டு, பொதுவாக ரோடு போடுவதற்கோ அல்லது சாலைகளை அமைப்பதற்கோ அல்லது பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைப்பதற்கோ உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதை நான் இப்பொழுது அறிவுரையாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொன்றாகச் செய்கின்றபொழுது, அந்த பஞ்சாயத்து யூனியனிலே, சில பஞ்சாயத்து போர்டுகளிலே, ஊராட்சி மன்றங்களிலே நடைபெறுகிறபொழுது, சில சாலைகள் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. அதை ஊராட்சி மன்றத்தினுடைய தலைவரவர்கள் செப்பனிட்டு, அவைகளைச் சீர் செய்வதற்கு அவர்களுக்கு ஒரு அதிகாரம் இருந்தால் அவர்கள் செய்து விட்டு, அந்த ஊராட்சி ஒன்றியத்திலே அதற்கான செலவுகளைச் சரி செய்து கொள்வதற்கான ஒரு அதிகாரம் கிடைக்கும். (மணியடிக்கப்பெற்றது).

இப்படிப்பட்ட திருத்தங்களையெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும், ஒன்றியப் பெருந் தலைவருக்கும் வழங்கியிருப்பதை வரவேற்று, நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(பிற்பகல் 4-00)

பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 25—3—1989 ஆம் நாளைய சட்டமன்ற நிகழ்ச்சிகளின் படங்களை வெளியிடுவது குறித்து—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் முதலிலே எழுந்தது—on a point of clarification. இன்று நீங்கள் 25—3—1989 ஆம் தேதி சட்டமன்ற நிகழ்ச்சிப் படங்களை

வெளியிடுவது குறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதிலே இறுதி பகுதியிலே சென்னை தொலைக்காட்சி நிலையத்தாரும், தமிழக அரசுச் செய்தித் துறையினரும் 25–3–1989 ஆம் நாளன்று சட்டமன்றத்திற்குள் எடுத்த படங்களை வெளியிட்டுக் கொள்ள அனுமதி வழங்குகிறேன். அவற்றை வெளியிடுவதும், வெளியிடாமல் இருப்பதும் அவர்களுடைய பொறுப்பும் விருப்புமாகும் என்று சொல்லியிருந்தீர்கள். இது தவிர மற்றவர்கள் யாரேனும் படம் எடுத்திருந்தால் அவைகளை வெளியிடுவதற்கு தடை இல்லை அல்லவா? அந்த விளக்கத்தைக் கேட்கவே நான் எழுந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையில் வேறு யாரும் அப்படிப் படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை, எனவே, இந்தக் கேள்விக்கு இடமில்லை. வேறு யாரும் தனிப்பட்ட முறையில் வந்து படம் எடுத்திருந்தால் அது வேறு வகையான குற்றத்திற்குள்ளாகும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இந்த அவையில் நாங்கள் அனுமதித்து இருப்பது சென்னை தொலைக்காட்சியினரை, தமிழக அரசு செய்தித் துறையினரைத்தான். எனவே, அவர்களுக்கு மட்டும் தான் விதிமுறைகளைச் சொல்ல முடியுமே தவிர, இதற்கு மாறாக வேறு யாரேனும் இயங்கியிருந்தால் அது இதில் உட்படுத்தப்படாது. இப்போது விவாதத்தின் மீது திரு. குமரி அனந்தன் பேசுகிறார்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அந்த விளக்கத்தை உங்களிடம் கேட்டு, என் மூலமாக தமிழகமும் தெரிந்து கொண்டது. இப்போது பஞ்சாயத்தைப் பற்றி நம்முடைய அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் இங்கே குறிப்பிட்டபோது பல்வேறு செய்திகளை எடுத்து வைத்தார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் என்பது அதற்கு கீழே இருக்கிற ஊராட்சிகள் என்பது நம்முடைய நாட்டினுடைய ஜனநாயகத்தின் வேர்களாகக் கருதப்படுகின்றன. இன்று மட்டுமல்ல, தொன்று தொட்டு நம்முடைய நாட்டிலே குடவோலை முறையின் மூலமோ அல்லது மற்றவகையிலோ தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராமங்கள் ஆட்சி செய்யப்